# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8004862

08/AC/2019/KM

1. District : Kanchipuram PS: V&AC.Kanchipuram FIR No.: Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு 2019 மு.த.அ. எண் நாள் 4.10.2019 at 16.00 hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act.2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 18/4/19 நாள் முதல் 24.9.19 நாள் வரை 26.9.19
Time Period : @12.00 hrs Time from : @15.00 hrs Time to : @11.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 04.10.2019 Time : 14.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 04.10.2019 Time : 14.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.10.2019 நேரம் 16.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South About 55 KM
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : Office of the Village Administration Office. Mathuranthagam Taluk. Orathi Village. Kanchipuram. dist.
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.V.K.Chellappan (b) Father's/ Husband's Name : Tr.Kanniyappan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : age 66 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Former (g) Address : No.1/Ab. Vinayagar Koil Street Vinnampoondi Village. Mathuranthagam Taluk. Kanchipuram. dist.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Rajkumar
Firka Surveyor. Orathi Firka. Mathuranthagam. Taluk.
Kanchipuram. dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Delay in reporting by the Complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : Demanded R.S 15,000/-
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —Nil.
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) — Nil.

Attached in separate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ G. Annadurai Rank INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC Kanchipuram on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V.K. [signature] 4-10-19

G.A. [signature] 4/10/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.10.2019 at 09.00 hrs

Name: பெயர் G. ANNADURAI
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
V&AC Kanchipuram.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2019/KM. U/s. 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 continues.....)**

<u>பணிந்து அனுப்பப்பட்டது,</u>

இன்று 04.10.2019 - ஆம் தேதி பகல் சுமார் 14.00 மணியளவில், நான் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை அழைத்து, காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தாலுக்கா, விண்ணம்பூண்டி கிராமம், எண்.1/46, விநாயகர் கோயில் தெருவைச்சேர்ந்த திரு. V.K.செல்லப்பன், வயது-66, த/பெ. கன்னியப்பன் என்பவரை எனக்கு அறிமுகப்படுத்தி விவரங்களை தெரிவித்து, அவர் கொடுத்த புகாரை என்னிடம் கொடுத்து, அப்புகாரின்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி கையொப்பம் செய்து கொடுத்தார். அந்த புகாரின் விவரம் வருமாறு -

அனுப்புநர், V.K.செல்லப்பன், வயது-66, த/பெ. கன்னியப்பன், எண்.1/46, விநாயகர் கோயில் தெரு, விண்ணம்பூண்டி கிராமம், மதுராந்தகம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம். ஐயா, நான், என் குடும்பத்தாருடன் விண்ணம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு பெண் மற்றும் இரண்டு பிள்ளைகள் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. என் பெயரில் விண்ணம்பூண்டி கிராமத்தில் சுமார் 4 ஏக்கர் நிலம் உள்ளது. அதோடு, என் அப்பா வாங்கிய சொத்தில், பாகப்பிரிவினைப்படி எனக்கு சுமார் 4.5 ஏக்கர் நிலம் வந்தது. அதை என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துக்கொள்ள வேண்டி, கடந்த 2016-ம் ஆண்டு முதல் மதுராந்தகம் தாசில்தாருக்கு மனு அனுப்பி வருகிறேன். அதேபோல், கடந்த 16.09.2019-ந்தேதியும் ஆன்லைனில் மனு கொடுத்தேன். அனைத்து மனுவிலும், விண்ணம்பூண்டி கிராம சர்வே எண். 177/5 (21 செண்ட்), 233/3 (24 செண்ட்), 234 (33 செண்ட்), 237 (40 செண்ட்), & 240/2A5 (86 செண்ட்) ஆகியவற்றில் சுமார் 2.04 ஏக்கர் நிலத்தின் பட்டா பெயர்களை என் பெயரில் மாற்றிக் கொள்ள மனுவினை அனுப்பினேன். கடைசியாக நான் மனு அனுப்பிய நாளன்றே (16.09.2019) என் நிலத்திற்கு தனிப்பட்டா வாங்குவது சம்மந்தமாக முதலில் பார்க்க வேண்டிய நபர் குறித்து தாசில்தார் அலுவலகத்தில் விசாரித்தபோது, ஒரத்தி பிர்கா சர்வேயர் திரு.இராஜ்குமார் அவர்களை ஒரத்தி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்று பார்க்குமாறு கூறினார்கள். அதன்படி நானும் அன்றைய தினமே சென்று, அவரை ஒரத்தி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பார்த்தேன். அப்போது, அவருடன் எங்கள் பக்கத்து கிராமமான

**(FIR contents, continues to the next page...)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2019/KM U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues.....)**

அளந்தமங்களத்தைச் சேர்ந்த ரிடையர்டு மணியக்காரர் திரு.முத்தையாள் ரெட்டியார் அவர்களும் உடன் இருந்தார். அப்போது பிர்கா சர்வேயர் இரண்டு நாள் கழித்து அதாவது 18.09.2019-ந்தேதி நிலத்திற்கு வந்து அளப்பதாகவும் அதற்கு தயாராக இருக்குமாறும் கூறி அனுப்பினார். அதன்படி கடந்த 18.09.2019-ந்தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் பிர்கா சர்வேயர் திரு.இராஜ்குமார் அவர்கள் அவருடைய ஆட்கள் மற்றும் ரிடையர்டு மணியக்காரர் முத்தையாள் ரெட்டியாரும் வந்து சம்மந்தப்பட்ட என் நிலங்களை அளந்தார்கள். அப்போதுதான் தெரிந்தது. மேற்படி ரிடையர்டு மணியக்காரர் ஏற்கெனவே எங்கள் பகுதியில் மணியக்காரராக வேலை பார்த்து ரிடையர்டு ஆனதால். அனைத்து நிலங்களின் அத்துகளும். சர்வே நெம்பர்களும் அவருக்கு அத்துப்படி என்பதாலும். அளப்பதற்கு உதவியாகவும் பிர்கா சர்வேயர் அளக்க செல்லும் இடங்களுக்கெல்லாம். இவரையும் உடன் அழைத்துச்செல்வார் என்பது தெரியவந்தது. பின்பு. பிர்கா சர்வேயர் திரு.இராஜ்குமார் என்னுடைய பட்டா பெயர் மாற்றத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நானே செய்து தருகிறேன். அதற்காக ரூ.32,000/-ம் பணம் செலவாகும். அதனை தயார் செய்துக்கொண்டு என்னிடம் கூறுங்கள் நான் பட்டா பெயர் மாற்றுவதற்கான வேலையை ஆரம்பித்து விடுகிறேன் என்று கூறினார். நான் பணத்தொகை மிகவும் அதிகமாக உள்ளது. மழை இல்லாததால் விவசாயத்தில் லாபம் ஒன்றும் வருவதில்லை. அதனால் பார்த்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் அளந்ததற்கு மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்ய ஆகும் செலவுகள் இருப்பதால் சொன்ன பணத்தை ரெடி பண்ணுங்கள் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். இந்த விவரத்தை என் மூத்த மகன் கணேசமூர்த்தியிடம் கூறினேன். அதன்பிறகு கடந்த 24.09.2019-ந்தேதி என் வயலருகே வேறு ஒருவரின் நிலத்தை அளப்பதற்காக ஒரத்தி பிர்கா சர்வேயர் திரு.இராஜ்குமார் வந்திருப்பதாக தெரிந்து நானும். என் மகனும் சென்று மாலை சுமார் 03.00 மணியளவில் பிர்கா சர்வேயரை பார்த்து. என்னுடைய பட்டா பெயர் மாற்றம் குறித்து கேட்டோம். அதற்கு அவர் என் மகனிடம். ஏற்கெனவே உன் அப்பாவிடம் பட்டா பெயர் மாற்ற ரூ.32,000/-ம் செலவுகள் ஆகும் என்று கூறினேன். நீங்கள் இவ்வளவு தூரம் கேட்பதால். முடிவாக ரூ.23,000/-ம் பணத்துடன் உன் அப்பாவை 26.09.2019-ந்தேதி ஒரத்தியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு வந்து என்னை பார்க்க சொல்லுங்கள் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்படி நான். 26.09.2019-ந்தேதி காலை 11.30 மணியளவில் ஒரத்தி மணியக்காரர் அலுவலகத்திற்கு சென்று திரு.இராஜ்குமார். ஒரத்தி பிர்கா சர்வேயர் அவர்களை

**(FIR contents, continues to the next page...)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2019/KM U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues.....)**

பார்த்தேன். அவரும், என்னை பார்த்தவுடன், பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். நானும், இன்னும் பணம் முழுவதுமாக ரெடி பண்ணமுடியவில்லை என்று கூறினேன். அதற்கு சர்வேயர் அவர்கள், நீங்கள் முதலில் ரூ.15,000/-ஐ மட்டுமாவது தயார் செய்துக்கொண்டு வாருங்கள், பட்டா பெயர் மாற்றத்திற்கான வேலையை தொடங்கிவிடலாம், மீதிப்பணத்தை உங்கள் பெயரில் பட்டா கொடுக்கும்போது, கொடுத்துவிட வேண்டும் என்று கறாராக கூறினார். நானும் திரும்பி வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சமாக ஒரத்தி பிர்கா சர்வேயர் திரு.இராஜ்குமாருக்கு பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால், அதுசம்மந்தமாக என் மூத்த மகன் கணேசமூர்த்தி, இன்று சென்னையில் இருந்து ஊருக்கு வந்தவுடன் சர்வேயர் கேட்ட லஞ்சப்பணம் குறித்து பேசினேன். அவரும், சர்வேயருக்கு பணமெல்லாம் கொடுக்க வேண்டாம், அவர் மீது நடவடிக்கை எடுக்க காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் கொடுத்துவிடலாம் என்று கூறினார். நாங்கள் இருவரும் சேர்ந்து புகார் ஒன்றை தயார் செய்தோம். பின்பு என் மகன் மீண்டும் பணிநிமித்தமாக சென்னைக்கு செல்ல வேண்டியிருந்ததால், என்னை லஞ்ச ஒழிப்பு போலீசாரை பார்த்து புகாரை கொடுக்குமாறு கூறிவிட்டுச் சென்றார். அதன்பின் நான் இன்று சர்வேயர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/-ஐ ஏற்பாடு செய்துக்கொண்டு, ஒரத்தி பிர்கா சர்வேயர் திரு.இராஜ்குமார் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தங்கள் அலுவலகம் வந்து புகார் மனு அளிக்கிறேன். இதுசம்மந்தமாக, தாங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு, ஒப்பம்--- V.K.செல்லப்பன்.

**Honoured Sir,**

Received the above complaint from DSP/V&AC, KPM with his endorsement on 04.10.2019 at 14.00 hrs., and after making a preliminary enquiry, about the genuineness of the complaint, the reputation of the accused and any enmity between the complainant and accused is verified in a discreet manner, since, a prima facie made out to register a case in Kanchipuram V&AC Cr.No.8/AC/2019/KM u/s. 7 of The Prevention of Corruption (Amendment) Act-2018 is registered against the accused on 04.10.2019 at 16.00 hrs.

4/10/2019

**(G.ANNADURAI),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Kanchipuram.